செய்தி வெளியீடு எண் : 1395 நாள் : 14.07.2023

<u>செய்தி வெளியீடு</u>

# மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்களின் தலைமையில் இன்று 14.07.2023 கைத்தறி துறை மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிர்வாக செயல்பாடுகள் குறித்து துறை அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் கைத்தறி ஆணையரக அலுவலகத்தில் நடைபெற்றது.

2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சட்டமன்றப் பேரவை அறிவிப்புகளில், செயலாக்கத்தில் உள்ள திட்டங்களை விரைந்து முடிக்கவும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் உரிய அறிவுரைகள் துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கி, அவர்கள் பெற்று வரும் கூலியினை கணிசமான அளவில் உயர்த்தி அவர்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் நோக்குடனும், கைத்தறி துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் 1) உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்கள், 2) சந்தை ஊக்குவிப்பு திட்டங்கள், 3) நெசவாளர் நலத்திட்டங்கள் மற்றும் 4) ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் மீதான மேல்நடவடிக்கை குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு துறை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கி வரும் அரசின் சீரிய திட்டமான சேலை மற்றும் வேட்டி வழங்கும் திட்டத்தினை பொங்கல் 2024–க்கு செயல்படுத்த அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி தொடர்பான பணிகளை சங்கங்களில் உடனே துவக்கி குறித்த காலத்திற்குள் இத்திட்டத்தினை விரைந்து நிறைவேற்றி தரமான சேலைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தி செய்ய அறிவுறுத்தப்பட்டது. அரசின் மற்றொரு சீரிய திட்டமான பள்ளி மாணாக்கர்களுக்கு சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் சீருடைகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி உரிய நேரத்தில் வழங்கப்படுகிறது.

கைத்தறி நெசவின் பாரம்பரியத்தையும் அதன் அடிப்படைத் தன்மையையும் பாதுகாக்கும் வகையில் இயற்றப்பட்ட கைத்தறி இரக உற்பத்தி ஒதுக்கீடு சட்டம் 1985–இன் கீழ் கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதை தடை செய்யும் வகையில் மண்டல வரியாக பறக்கும் படைகள் அமைத்து தொடர் ஆய்வு மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டது.

மேலும், கைத்தறி துறையின் உள்கட்டமைப்பினை மேம்படுத்தி கைத்தறி துணிகளை அதிக அளவில் சந்தைப்படுத்தும் நோக்குடன் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான 10 சிறிய அளவிலான கைத்தறி பூங்காக்கள் அமைக்கும் திட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் அமைக்கப்படவுள்ள டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பட்டு கைத்தறி பூங்கா தொடர்பான பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர ஏதுவான நடவடிக்கைகளை மேற்கொண்டு நடப்பு நிதியாண்டிற்குள் நிறைவேற்றிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் வகையில் 1) நெசவாளர்களுக்கென 100 மருத்துவ முகாம்கள் நடத்துதல், 2) நெசவாளர்களுக்கு அனைத்து துறைசார் நலத்திட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல் 3) கல்லூரிகளில் கைத்தறி விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், 4) முத்ரா திட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல் மற்றும் 5) நெசவாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் மரம்நடும் விழாக்கள் நடத்துதல் உள்ளிட்ட திட்ட பணிகளை நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் சிறப்புடன் செயல்படுத்திட அறிவுறுத்தப்பட்டது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 2023–24 நடப்பு ஆண்டிற்கு ரூ.400 கோடி விற்பனை இலக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கான புதிய வியாபார நடவடிக்கைகளாக, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மின் வணிகம் மேம்பாடு மற்றும் ஏற்றுமதி மேம்பாடு போன்ற நடவடிக்கைகள் மூலம் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை இலக்கை அடைய புதிய வணிக உத்திகளை வகுத்து செயல்படுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலர் திரு தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., கைத்தறி துறை ஆணையர் திரு கே.விவேகானந்தன், இ.ஆ.ப., கைத்தறி துறை அலுவலர்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in